# மவுண்ட் றூயிட் தமிழ் கல்வி நிலையம்

## Mount Druitt Tamil Study Centre

Mobile: 0449 892 066
Email :mtdruitttsc@gmail.com
Web : www.mtsc.org.au

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

## பேச்சுப் போட்டி 2021

## ஆண்டு 6

இங்கு நடுநிலை வகிக்க வந்திருக்கும் நடுவர்களுக்கும் மற்றும்
அனைவருக்கும் எனது மனமார்ந்த வணக்கங்கள்
நான் இங்கு பேச எடுத்துக் கொண்ட தலைப்பு



## பெற்றோரைக் கனம் பண்ணுதல்

மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் தொடரில் தாய், தந்தையரே முதலில் வருகின்றார்கள். ஏனென்றால், நமக்கு உயிர் தந்து, உடல் கொடுத்து பெற்றெடுத்து வாழ்வளித்து இன்றுவரை நம்மைப் பாதுகாத்து பராமரித்து வருகின்ற பெற்றோர்களே நமது கண்முன்னே வாழும் தெய்வங்கள்.

தாயின் வயிற்றிற் கருவான நாள்முதல் என்னன்னவோ எண்ணங்கள் பெற்றோரின் மனங்களிலே சமூகத்திற் சிறந்த பிரஜையாக, பார்போற்றும் சிறந்த பண்பாளனாக வளர்த்தெடுக்க வேண்டும் என்று எத்தனையோ கனவுகள். குழந்தைப் பராயம் முதல் சிறுபராயம் வரை பெற்றோரின் விருப்பமே எமது விருப்பமாக இருந்துள்ளது.

குடும்பம் என்பது பெற்றோர் பிள்ளைகள் இடையிலும், உடன் பிறந்தோர் இடையிலும் நெருங்கிய பாசப் பிணைப்பைக் காட்டுகின்றது. எனவே பெற்றோரை நேசித்தல், அவர்களைக் கடைசிக் காலத்திலும் பேணிக் கனம் பண்ணுதல் பிள்ளைகள் எல்லோருடைய கடமையுமாகும். இன்று நாம் நமது பெற்றோருக்குச் செய்வது நாளை நமக்கும் கிடைக்கும்.

அம்மா என்றால் அன்பு, அப்பா என்றால் அறிவு. தாயிற் சிறந்த கோயிலுமில்லை. தந்தை சொல்மிக்க மந்திரமில்லை எனக் கூறி எனது உரையை முடிக்கின்றேன்.

நன்றி. வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திரு. எல்விஸ் எமிலியானுஸ்

பேச்சுப் போட்டி எதிர்வரும் 29.05.2021 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.